# எறும்பியப்பா
# வாழி திருநாமம்

சந்ததமும் வரவரமுநி தாள் தொழுவோன் வாழியே
   தாரணியில் எறும்பி நகர் தழைக்க வந்தோன் வாழியே
ஆநந்தமுடன் தினசரியை அருளினான் வாழியே
   ஐப்பசியில் ரேவதி நாள் அவதரித்தோன் வாழியே
மந்த மதியர்க்கெல்லாம் வாழ்வளித்தான் வாழியே
   வரவரமுநி சதகம் வாய்ந்துரைத்தான் வாழியே
செந்தமிழும் வடகலையும் தேசுடையோன் வாழியே
   தேவராசன் அடியிணைகள் செகதலத்தில் வாழியே

---